**தலைப்பு 117 – உயர்கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2017 ஆம் ஆண்டு**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது பட்டோலையிலும் மூன்றாவது பட்டோலையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கத்தின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக்கூற்று என்பன உயர்கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலும் இணக்கக்கூற்றுக்களிலும் காட்டப்பட்டுள்ள நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

## 1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிதன்மை தொடர்பான பொறுப்பு

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 இன் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை செய்தல் தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) இன் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டுள்ளார். நிதிப்பிரமாணம் 125(1)(அ) இன் பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.3 கணக்காய்வில் நோக்கெல்லை

---

தலைப்பு 117 – உயர்கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான பெருந்தெருக்கள் பிரிவிற்கும் உயர்கல்விப் பிரிவிற்குமுரிய முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை காலக்கிரமத்தில் வழங்கப்படும். கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக – உயர்கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சின் கீழுள்ள பெருந்தெருக்கள் பிரிவு சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் இந்த அறிக்கையின் I ஆவது பகுதியின் 2.1 ஆம் பந்தியிலிருந்து 2.17 ஆம் பந்திகள் வரையான பந்திகளிலும் உயர்கல்விப் பிரிவு சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் 2 ஆம் பகுதியின் 3.1 ஆம் பந்தியிலிருந்து 3.10 ஆம் வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மையை உறுதிப்படுத்தும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 127 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றுகையில் வெளிப்படுத்தப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட்டு பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிப்பொறுப்பை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளார் என்பது அவதானிக்கப்பட்டது.

| நிதிப்பிரமாணம் 127 இன் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிதன்மை. | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் அந்த ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்தமை | | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு |
|---|---|---|---|---|
| நிதிப்பிரமாணம் | | | | |
| 127(1)(அ) | சரியான மற்றும் நிதி முறையாக செய்யப்படுவதாக உறுதிப்படுத்தப்படும் வகையில் சகல நிதிச் செயற்பாடுகளும் திட்டமிடப்பட வேண்டும். | 1. | செயல் நடவடிக்கைத் திட்டத்திலுள்ள குறைபாடுகள். | 2.1.1 மற்றும் 3.1.2 |
| | | 2. | திட்டத்திற்கு இணக்கமற்ற வகையில் நிதியத்தை விடுவித்தல். | 2.1.2(உ) |
| | | 3. | உள்ளகக் கணக்காய்விலுள்ள குறைபாடுகள் | 2.17 |
| 127(1)(ஆ) | செலவினம் மற்றும் அரச வருமான சேகரிப்பு தொடர்பாக போதியளவு கட்டுப்பாட்டிற்கு ஒழுங்கு விதிகளை ஏற்படுத்தும் முறையொன்று தயாரித்துக் கொள்ளப்படல் வேண்டும். | 1. | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள் | 2.14.1 |
| | | 2. | ஒப்பந்தங்கள் சம்பந்தமாக வசதிகள் அறவீடு செய்வதிலுள்ள குறைபாடுகள் | 2.14.2 |
| | | 3. | மனித வளங்கள் முகாமைத்துவத்திலுள்ள குறைபாடுகள் | 2.18 |
| | | 4. | முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள் | 3.5 |
| | | 5. | முகாமைத்துவ குறைபாடுகள் | 3.10 |
| 127(2) | தமது நிர்வாகத்தின் கீழ் காணப்படும் திணைக்களங்களில் அப்போது இருக்கும் | 1. | கடமைகளை நிறைவேற்றாமை | 2.1.2 (அ) |

| | | | |
|---|---|---|---|
| செலவின விடயங்கள் உட்பட புதிதாக அல்லது கூடுதலாக செலவு செய்வதற்கான முன்மொழிவுகள் சிக்கனமாகவும் செயற்திறனான வகையிலும் அமைச்சின் பரிசீலனைக்கு உட்படுத்தல். | 2. | எதிர்பார்த்த பூர்த்தியாக்கல் மட்டத்தை அடைந்து கொள்ளாமை. | 2.1.2(ஆ) மற்றும் 3.1.3 |
| | 3. | செயற்திட்டங்களை பூர்த்தி செய்யாமல் கைவிடுதல் | 2.1.2 (இ) |
| | 4. | கடந்த ஆண்டுகளில் செய்யப்பட்ட வேலைகளுக்கான விலைப்பட்டியல்களுக்கு கொடுப்பனவு செய்தல் | 2.1.2(ஈ) |
| | 5. | செயற்திட்ட கிரயங்களை இணக்கம் செய்யாமை. | 2.2.1(அ) |
| | 6. | செயற்திட்டங்களின் செயலாற்றல் தொடர்பான குறைபாடுகள் | 2.2.1(ஆ) |
| | 7. | செயற்திட்டங்களின் சில வேலைகள் கைவிடப்படுதல். | 2.2.1(இ) |
| | 8. | செயற்திட்டங்களால் செய்யப்பட்ட சில செலவுகள் சச்சரவுத் தன்மையானதாக இருத்தல் | 2.2.1(ஈ) |
| | 9. | தோற்றுவிக்கப்பட்ட பிணை முறிகளைப் பெற்றுக்கொள்ளாமை | 2.2.1(ஊ) |
| | 10 | வேலைகளைப் பூர்த்தி செய்த ஒப்பந்தங்களுக்காக முரண் கட்டளைகளை அடிப்படையாகக் கொண்டு நிர்மாணங்கள் மேற்கொள்ளல் | 2.2.1(எ) |
| | 11. | காணிகளைச் சுவீகரிப்பதிலுள்ள தாமதத்தின் காரணமாக மேலதிகமாகச் செலுத்தப்பட்ட வட்டி | 2.2.1(ஏ) |
| | 12. | ஒப்பந்தக்காரருக்கு நலன் அளிக்கும் வகையில் உடன்படிக்கைகள் செய்து கொள்ளல். | 2.2.1 (ஐ) |
| | 13. | முன்னைய ஒப்பந்த கட்டங்களின் போது இடம் பெற்ற குறைபாடுகள் | 2.2.1(ஒ) |
| | 14 | செயற்திட்டங்களை திட்டமிடுவதிலுள்ள குறைபாடுகள் | 2.2.1(ஓ) |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 15. | கணியப்பட்டிகளில் உள்ளடக்கப்பட்ட விலைகள் நடைமுறைச் சாத்தியமற்றவையாக இருத்தல் | 2.2.1(ஔ) |
| | | 16. | அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டிக் கோவைகளுக்கு முரணாகச் செயற்படல் | 2.2.1 (ஃ) |
| | | 17. | சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள் | 2.2.1 (க) 2.8, மற்றும் 3.6 |
| | | 18. | உள்நாட்டு நிதிகளை ஈடுபடுத்திய செயற்திட்டங்களின் குறைபாடுகள் | 2.2.2 |
| | | 19. | ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கிய நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்துவதிலுள்ள குறைபாடுகள். | 2.10 (இ) |
| | | 20. | விடுதிகளை நிர்மாணிப்பதிலுள்ள குறைபாடுகள் | 3.1.1 |
| | | 21. | வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்களின் செயலாற்றலிலுள்ள குறைபாடுகள் | 3.2.1 |
| | | 2.2 | வாகனங்களை பயன்படுத்துவதிலுள்ள கறைபாடுகள் | 3.3 (அ) |
| 127(3) | ஐயத்திற்குரிய அல்லது சிக்கலான விடயங்கள் அனைத்தையும் தமது சொந்த நிர்வாக அனுபவத்தையும் தீர்மானத்தையும் அதில் பிரயோகிப்பதற்காக அவருக்கு வழங்கப்படுகின்றதெனவும் | 1. | வருடாந்த பொருள் மெய்மையாய்வினை நடாத்துதல் | 2.4 மற்றும் 3.3 (ஆ) |
| | | 2. | பொது மக்களுக்காக சேவைகளை நிறைவேற்றுவதிலுள்ள குறைபாடுகள் | 2.9 |
| | | 3. | வருடாந்த செயலாற்றல் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல் | 2.1.3 மற்றும் 3.1.4 |

| | | | | |
|---|---|---|---|---|
| 127(4) | தமது ஒவ்வொரு கணக்கீட்டு உத்தியோகத்தரால் ஒதுக்கீட்டுக் கணக்குகள் முறையாக சமர்ப்பிக்கப்படுவதாகவும் தாம் அனுப்பி கையொப்பமிடுவதற்கு முன்னர் அமைச்சினால் பரீட்சிக்கப்பட்டதெனவும் அவ்வாறே மதிப்பீடுகளில் நிதி ஏற்பாடு மற்றும் உள்ளவாறான செலவினத்திற்கு இடையே காணப்படும் கருத்திற் கொள்ளக் கூடியளவு வேறுபாடு தம்மால் அழுத்தமாக புலனாய்விற்கு உட்படுத்தப்படல். | | பொது வைப்புக்கணக்குகளிலுள்ள குறைபாடுகள் | 2.12 |
| 127(5) | திணைக்களத்தின் மதிப்பீடுகளில் நிதிஏற்பாடு மற்றும் செலவினத்திற்கு இடையே உள்ள கருத்திற் கொள்ளக் கூடியளவு வேறுபாடு அமைச்சினால் நுட்பமாக புலனாய்விற்கு உட்படுத்தப்பட்டதாகவும். | 1. | நிதி ஏற்பாட்டை எல்லையை மிகைத்து பொறுப்புக்களுக்கு கடப்பாடு செய்தல். | 2.5 (அ) மற்றும் 3.4 |
| | | 2. | பாதீட்டு நிதி ஏற்பாடு இன்றி பொறுப்புக்களை அடுத்துவரும் ஆண்டுக்கு கொண்டு செல்லல் | 2.5(ஆ) |
| | | 3. | வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டை பயன்படுத்தாமை | 2.10 (அ) மற்றும் 3.8 (அ) |
| | | 4. | மிகை நிதி ஏற்பாடு வழங்கப்படுதல் | 2.10 (ஆ) மற்றும் 3.8 (ஆ) |
| | | 5. | குறைநிரப்பு பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட நிதி ஏற்பாடு பயன்படுத்தப்படாமை. | 2.10 (இ) மற்றும் 3.8 (இ) |
| 127(6) | கணக்கீட்டு உத்தியோகத்தர்களின் பொறுப்பிற்கு வெளியே காணப்பட்ட வருமானம் அல்லது அரசிற்கு கிடைக்க வேண்டிய ஏனைய கட்டணங்கள் சேகரிக்கும் செயற்பாடுகளை கூடுதல் கவனத்துடன் செயற்பாட்டு அமைச்சின் பரிசோதனைக்கு உட்படுத்துதல் | | அரசாங்க உத்தியோகத்தர்களின் நிலுவைக் கடன் மீதிகளை அறவீடு செய்வதிலுள்ள குறைபாடுகள் | 2.11 |
| 127(7) | உத்தியோகத்தர்கள் / ஊழியர்களின் தாமதம், கவனயீனம், தவறுகள் அல்லது மோசடியால் அரசிற்கு நட்டம் ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் நிதிப் பிரமாணம் 103 முதல் 108 வரையான பிரமாணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் கணக்கீட்டு உத்தியோகத்தர்களினால் கடைப்பிடிக்கப்பட்டதாகவும், நிதிப்பிரமாணம் 156(1) இன் பிரகாரம் அந் நட்டங்கள் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் /ஊழியர்கள் பேரில் | 1. | நட்டங்களும் சேதங்களும் | 2.6 மற்றும் 3.9 |
| | | 2. | சேதங்கள் தொடர்பான பொறுப்பு | 2.7 |

மிகை கட்டணங்களை விதிப்பதனை கண்காணிக்கும் பொருட்டு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதால் தமக்கு கையளிக்கப்பட்டுள்ள பொறுப்புக்களிலிருந்து கணக்கீட்டு உத்தியோகத்தர் விடுவிக்கப்பட்டதாக கருதப்படும். அரசாங்க கணக்கு குழுவின் முன் தோன்றுவதற்கும் தாம் பொறுப்பு வகிக்கும் திணைக்களங்களின் கணக்குகளை தெளிவுபடுத்துவதற்கும் நியாயப்படுத்துவதற்கும் கணக்கீட்டு உத்தியோகத்தர்களுடன் ஒத்துழைத்தலும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கடமைப் பொறுப்பாகும்.

## I ஆம் பகுதி – பெருந்தெருக்கள் பிரிவு

### 2. பொருண்மையான மற்றும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 செயலாற்றல்

### 2.1.1 திட்டமிடல்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது பெருந்தெருக்கள் பிரிவினால் நிறைவேற்றப்பட வேண்டிய 08 பிரதான செயற்பாடுகளின் கீழ் 61 செயற்பாடுகள் காணப்பட்டன. பெருந்தெருக்கள் பிரிவின் கீழ் அமுல்ப்படுத்தப்பட்டிருந்த 37 வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்கள், உள்நாட்டு நிதியங்களிலிருந்து நிதியளிக்கப்படுகின்ற ஒரு நிகழ்ச்சித்திட்டம், மற்றும் மேலும் ஒரு நிதியத்தின் மூலம் எதிர்பார்த்த பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்வதற்காக செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. அச் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மூலதனச் சொத்துக்களுக்காக வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் ரூபா 116,017 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறே மிகை நிதி ஏற்பாடு ரூபா 205,922 மில்லியனாக இருந்தது. அவ்வாறு மேலதிக நிதி ஏற்பாட்டைப் பெற்றுக்கொண்டதன் காரணமாக நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகளின் மாற்றங்களுக்கு இணங்கியவாறு செயல் நடவடிக்கைத் திட்டத்தை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.1.2 கடமைகளை நிறைவேற்றாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட கடமைகள் நிறைவேற்றப்படாமை.**

இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கிணங்க பெருந்தெருக்கள் பிரிவினால் அமுல்ப்படுத்தப்பட வேண்டிய 37 வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்களில் 08 செயற்திட்டங்களுக்காக ஒப்பந்தக்காரரைத் தெரிவு செய்வதிலுள்ள தாமதம், இழப்பீட்டை வழங்கும் நடைமுறையை வர்த்தமானியில் பிரசுரிக்காமை, சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்காக மதிப்பீட்டு அறிக்கையை வழங்குவதில் தாமதம், பொதுத் திறைசேரியின் கட்டு நிதியை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை, வீதி அபிவிருத்தி அதிகார

சபையினால் செலவுகளை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான பதிவேடுகள் திறைசேரிக்குச் சமர்ப்பிக்கப்படாமை முதலிய பல்வேறு காரணங்களின் அடிப்படையில் அமுல்ப்படுத்துவதற்கு முடியாதிருந்தது. அவ்வாறு நிறைவேற்றப்படாத செயற்பாடுகளுக்காக ரூபா 732.93 மில்லியன் மேலதிக நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது.

(ii) மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாதிருந்த கண்டி சுரங்கம் நிர்மாணிக்கும் செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டின் போது வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டில் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டிலிருந்து எதுவித தேவைக்கும் பயன்படுத்தாததன் காரணமாக தேறிய நிதி ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது. எனினும், ஏழ்மை சாதக கிழக்கு மாகாண உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டின் இறுதி வரை ரூபா 525 மில்லியன் பொறுப்புக்களுக்கு கடப்பாடு செய்யப்பட்டிருந்தது. அப்பொறுப்புக்கள் 2018 ஆம் ஆண்டின் போது தீர்த்து வைப்பதற்காக 2018 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக 2018 ஆம் ஆண்டின் போது அப்பொறுப்புக்களைத் தீர்த்து வைப்பதற்காக குறை நிரப்பு பாதீட்டு ஒதுக்கீடுகளின் மூலம் நிதி ஏற்பாடு வழங்கப்பட வேண்டியிருந்தது.

**(ஆ) எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தியாக்கல் மட்டத்தை அடைந்து கொள்ளாமை**

வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் காட்டப்பட்டிருந்த 61 செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக 39 நானாவித செயற்திட்டங்களுக்காக ரூபா 191,761 மில்லியன் நிதிஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருந்ததும் அவற்றில் 24 செயற்பாடுகளின் எதிர்பாாத்த பூர்த்தியாக்கல் மட்டம் அடைந்து கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(இ) செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாது கைவிடப்படுதல்.**

பேஸ்லைன் வீதியை விஸ்தரிக்கும் III ஆம் கட்ட செயற்திட்டம் ரூபா 719 மில்லியன் மதிப்பீட்டுச் செலவின் அடிப்படையில் 2009 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அச் செயற்திட்டத்திற்காக ரூபா 541.76 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. காணிச் சுவீகரிப்பு நடவடிக்கை முடிவுறுத்தப்படாமையின் காரணமாக அச் செயற்திட்டங்கள் கைவிடப்பட்டிருந்தன.

**(ஈ) கடந்த ஆண்டுகளில் செய்த வேலைகளுக்காக விலைப்பட்டியல்களுக்கு பணம் செலுத்துதல்.**

2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் போது இடம் பெற்ற ஒப்பந்த வேலைகளுக்காக திறைசேரியால் போதியளவில் கட்டுநிதிகள் வழங்கப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டில் ரூபா 1,629.99 மில்லியன் முன்னைய ஆண்டுகளின் விலைப்பட்டியல்களைச் செலுத்துவதற்காகச் செலவு செய்யப்பட்டிருந்தது.

### 2.1.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் பெருந்தெருக்கள் பிரிவினால் நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட வேண்டிய போதிலும் 56 நாட்கள் தாமதத்தின் பின்னர் 2018 யூலை 26 ஆந் திகதி அது பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.2 அமுல்ப்படுத்தப்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு உதவி செயற்திட்டங்கள்

மீளாய்வாண்டின் போது பெருந்தெருக்கள் பிரிவினால் உள்நாட்டு நிதியை ஈடுபடுத்திய ஒரு நிதியம் 1,358 மகநெகும கிராமிய அபிவிருத்தி செயற்திட்டங்கள் 25 வீதிகளை விஸ்தரித்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல் செயற்திட்டங்கள், 37 வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்கள் என்பவற்றிற்காக ரூபா 199,812 மில்லியன் நிதியை வழங்கியிருந்தது. மீளாய்வாண்டின் போது அவற்றில் ரூபா 185,652 மில்லியன் நிதி ஏற்பாடு மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க ரூபா 14,160 மில்லியன் அல்லது வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டில் 7.08 சதவீதமான நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

### 2.2.1 வெளிநாட்டு உதவி செயற்திட்டம்.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

#### (அ) செயற்திட்ட கிரயம் இணக்கம் செய்யப்படாமை.

பெருந்தெருக்கள் பிரிவினூடாக நிதியை வழங்கிய 07 வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்களின் ஒதுக்கீட்டுக் கணக்கிலுள்ளவாறான வெளிநாட்டு உதவி தொடர்பான செலவுகளை அச் செயற்திட்டங்களின் நிதிக் கூற்றுக்களின் வெளிநாட்டு உதவி பயன்பாட்டுடன் ஒப்பீடு செய்த போது 04 செயற்திட்டங்கள் மற்றும் 03 செயற்திட்டங்களின் செலவுகள் ஒதுக்கீட்டுக் கணக்கின் செலவுகளை விட முறையே ரூபா 3,537 மில்லியனால் அதிகரித்தும் ரூபா 594.9 மில்லியனால் குறைத்தும் காட்டப்பட்டிருந்தன.

#### (ஆ) செயற்திட்டங்களின் செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) தென் மாகாண வீதிகள் சம்பந்தமான செயற்திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்பட்ட கெஸ்பேவலிருந்து பொக்குனுவிட வரையும் மற்றும் கிருபலனவிலிருந்து கொடகம வரையுமான வீதிகளுக்காக ஒப்பந்தக்காரரின் செயற்திறனின்மை மற்றும் குறைந்த செயல் முன்னேற்றம் தொடர்பாக கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படாது ரூபா 49 மில்லியன் தற்காலிக முற்பணம் வழங்கப்பட்டிருந்தது.

(ii) தேசிய பெருந்தெருக்கள் சார்ந்த செயற்திட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகளின் குறைவான செயல் முன்னேற்றம் மற்றும் திட்டமிடல் பலவீனங்களின் காரணமாக ஐ.அ.டொலர் 6.13 மில்லியனுக்குச் சமமான ரூபா 923 மில்லியனை பயன்படுத்த முடியாதிருந்தது.

(iii) ஒருங்கிணைந்த வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் செயற்திட்ட நடவடிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்ட பலவீனங்கள் பௌதீக மற்றும் நிதிசார் செயல் முன்னேற்றத்தின் பெறுபேறுகளாக கடன் பணத்தை விடுவிக்கும் திட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படாததன் காரணமாக செயற்திட்டத்தினால் ஐ.கு,டொலர் 305,203 இற்குச் சமமான ரூபா 46 மில்லியன் தாமதக் கட்டணம் செலுத்தப்பட்டிருந்தது.

#### (இ) செயற்திட்டங்களில் உள்ளடக்கப்பட்ட சில நிர்மாண வேலைகள் கைவிடப்படுதல்.

தென்மாகாண வீதிகள் சம்பந்தமான செயற்திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்பட்ட மொறட்டுவையிலிருந்து பிலியந்தலை வரையும் மற்றும் இரத்மலானையிலிருந்து மிரிஹானை வரையுமான வீதிகளுக்காக

பொறியியலாளர் மதிப்பீட்டின் மூலம் ரூபா 1,322 மில்லியன் தொகையான வேலைகள் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தும் செய்யப்பட வேண்டிய வேலைகளுக்காக ரூபா 654 மில்லியன் வரையான பணம் பதிவழிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், தொடக்க மதிப்பீட்டின் அடிப்படையில் மேலதிகமாகச் செலுத்தப்பட்ட ரூபா 104 மில்லியன் அசைவுள்ள முற்பணத்தை அறவீடு செய்வதற்கு பெருந்தெருக்கள் பிரிவினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) செயற்திட்டத்தினால் செய்யப்பட்ட செலவுகள் சச்சரவுத் தன்மையானதாக இருத்தல்.**

கேள்வி ஆவணங்களைத் தயாரிக்கும் போதும் கேள்விகளை மதிப்பீடு செய்யும் போதும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் தமது பொறுப்புக்களை உரிய முறையில் நிறைவேற்றாததன் காரணமாக பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) ஒருங்கிணைந்த வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கும் தெற்கு அதிவேக வீதி செயற்திட்டத்திற்கும் உடன்படிக்கைகளின் பொதுவான நிபந்தனைகளின் கீழ் செயலாற்றல் பிணை முறிகளின் கிரயத்தை ஒப்பந்தக்காரர் ஏற்க வேண்டி இருந்தது. எனினும், மீளாய்வாண்டின் போது ரூபா 630 மில்லியன் பிணைமுறிக் கிரயம் செயற்திட்டத்தினால் செலுத்தப்பட்டிருந்தது.

(ii) செயலாற்றல் பிணை முறிக் கிரயத்தின் விலை விகிதமானது மொத்த பெறுமதியாக (lump sum) உள்ளடக்கப்பட்டதன் காரணமாக அதில் குறிப்பிடப்பட்ட முழுப் பணமும் உள்ளபடியான பெறுமதியைக் கவனத்தில் கொள்ளாது பணத்தைச் செலுத்துவதற்கு இணங்கி கொள்ளப்பட்டிருந்தது. அதன் காரணமாக ஒருங்கிணைந்த வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தினால் ஒப்பந்தக்காரருக்கு ரூபா 340 மில்லியன் மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

**(உ) நிதியத்தை விடுவித்தல் திட்டத்துடன் இணங்கியிருக்காமை**

செயற்திட்ட நடவடிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்ட பலவீனமான பௌதீக மற்றும் நிதி செயலாற்றலின் பெறுபேறாக கடன் பணத்தை விடுவிக்கும் திட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக இடம்பெற்ற தாமதத்தினால் ரூபா 46 மில்லியன் தாமதக் கட்டணம் கடன் வழங்கிய நிறுவனத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது.

**(ஊ) தோற்றுவிக்கப்பட்ட பிணை முறியைப் பெற்றுக்கொள்ளாமை.**

ஒருங்கிணைந்த வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மீள் ஏற்றுமதி செய்தல் அடிப்படையின் கீழ் வரி விடுதலை அடிப்படையில் ரூபா 323 மில்லியன் தொகையான பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டிருந்தது. எனினும், அது தொடர்பாக வேலைகளுக்குப் பொறுப்பான பொறியியலாளரின் அங்கீகாரம் அல்லது அதற்குத் தேவையான தோற்றுவிக்கப்பட்ட பிணை முறிகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் மேற்கூறிய பொருட்கள் செயற்திட்டத்தின் இறுதியின் போது மீள ஏற்றுமதி செய்யப்பட்டதா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக பொறுப்பான தரப்பினர்களால் மேற்பார்வை செய்யப்பட்டது. என்பது கணக்காய்வில் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(எ) வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தங்களின் முரண் கட்டளைகளை அடிப்படையாகக் கொண்டு நிர்மாணங்களை மேற்கொள்ளல்.**

---

தெற்கு அதிவேக வீதியில் பின்னதுவயிலிருந்து கொடகம வரையான பகுதியை நிர்மாணித்தல் 2014 ஆம் ஆண்டின் மார்ச் மாததத்தின் போது முடிவறுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் ஒப்பந்த உடன்படிக்கையின் 13.1 ஆம் நிபந்தனைக்கு முரணாக வழங்கப்பட்ட 198 முரண் கட்டளைகளின் காரணமாக 2017 ஆம் ஆண்டின் இறுதி வரை நிர்மாண நடவடிக்கைகள் இடம் பெற்றிருந்தன. முரண் கட்டளைகளின் அடிப்படையில் செலுத்தப்பட்ட பணமானது செய்யப்பட்ட வேலைகளின் பெறுமதியின் சதவீதமாக 106 சதவீதமாக இருந்தது.

**(ஏ) காணிகளைச் சுவீகரிக்கும் தாமதத்தின் காரணமாக தாமதித்த வட்டிக் கொடுப்பனவு.**

---

பதுளை செங்கலடி வீதியில் 5411 காணித்துண்டுகளைச் சுவீகரிப்பதற்குத் திட்டமிடப்பட்டிருந்தும் 2017 திசெம்பர் 31 வரை 40 காணித்துண்டுகளுக்காக மாத்திரம் ரூபா 13.3 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. உரிய வேளையில் காணிகளைச் சுவீகரிக்காமையின் காரணமாக 38 காணித்துண்டுகளுக்காக ரூபா 3.8 மில்லியன் தாமத வட்டி செலுத்தப்பட்டிருந்தது.

**(ஐ) ஒப்பந்தக்காரருக்கு நலன்தரும் வகையில் உடன்படிக்கை மேற்கொள்ளல்**

---

பதுளை செங்கலடி வீதியின் நிர்மாணத்திற்குரிய அளவீட்டு பத்திரத்தில் உள்ளடக்கப்பட்ட ஆய்வு கூட உபகரணங்களுக்கான மொத்த பெறுமதி (Lump Sum) விலை விகிதத்தின் கீழ் ரூபா 27 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. உபகரணங்களின் உரிமையை செயற்திட்டம் முடிவறுத்தப்பட்டதன் பின்னர் ஒப்பந்தக்காரருக்கு ஒப்படைக்கும் வகையில் உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டிருந்தது.

**(ஒ) ஒப்பந்தத்திற்கு முன்னைய கட்டத்தின் போது இடம் பெற்ற குறைபாடுகள்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) புதிய களணிப் பாலத்திலிருந்து அத்துருகிரிய வரை உயர்த்தப்பட்ட (Elivated) பெருந்தெரு செயற்திட்டத்தின் சுற்றாடல் தாக்க அறிக்கையைத் தயாரித்தல், மற்றும் மீள்குடியிருத்தல் திட்டத்தை தயாரிக்கும் ஒப்பந்தங்கள் முறையே ரூபா 3,945,000 மற்றும் ரூபா 3,713,760 பெறுமதிகளுக்கு வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தன. 2018 மார்ச் 31 ஆந் திகதி வரை அந்த அறிக்கை மற்றும் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) சாத்திய வள ஆய்வு அறிக்கையின் பிரகாரம் தெற்கு அதிவேக வீதிச் செயற்திட்டத்தின் தேறிய நிகழ்கால பெறுமதி ஐ.கு.டொலர் 1,271 மில்லியன் மறைப் றெுமதி மூலம் காட்டப்பட்டிருந்தும் அச் செயற்திட்டம் ஒரு செல்லுபடியாகும் செயற்திட்டமாக அமுல்ப்படுத்தப்பட்டிருந்தது.

**(ஓ) செயற்திட்டங்களை திட்டமிடுதல் பலவீனங்கள்**

---

பதுளை செங்கலடி வீதியின் நில அளவையாளர் திட்ட வரைபடத்தினை தயாரிப்பதற்கு ரூபா 605,000 செலவு செய்யப்பட்டிருந்தது. அத் திட்டத்தில் பணம் செலுத்தி தயாரிக்கப்பட்டிருந்த பிழையான நில அளவையாளர் திட்ட

வரைபடத்தின் காரணமாக திட்டமிடல் நடவடிக்கைகள் தாமதமடைந்திருந்தன. அதன் காரணமாக ஒப்பந்தக்காரரால் ஒப்பந்த காலத்தை நீடிப்பதுவும் செயற்திட்டத்தின் தொடக்க கட்டத்திலேயே வேண்டப்பட்டிருந்தது. அக்கால நீடிப்பை வழங்குவதற்கான அடிப்படைக் காரணமும் அதற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களும் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

**(ஔ) கணியப் பத்திரத்தில் உள்ளடக்கப்பட்ட விலைகள் நடைமுறைச் சாத்தியமாக இல்லாமை.**

---

பதுளை செங்கலடி வீதியின் கணியப்பத்திரத்தில் உள்ளடக்கப்பட்ட காப்புறுதி விடயத்திற்காக Lump Sum விலையின் கீழ் ரூபா 26 மில்லியன் ஒப்பந்தக்காரருக்குச் செலுத்தப்பட்டிருந்தது. ஒப்பந்தக்காரரால் காப்புறுதிச் செலவாக ரூபா 21 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க ஒப்பந்தக்காரரால் செலுத்தப்பட்ட பணத்திற்கு மேலதிகமாக ரூபா 5 மில்லியன் செயற்திட்டத்தினால் தீர்த்து வைக்கப்பட்டிருந்தது. கணியப்பத்திரத்தை தயாரிக்கும் போது அது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

**(ஃ) அரசாங்க பெறுகை வழிகாட்டிகளுக்கு முரணாக நடவடிக்கை எடுத்தல்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மத்திய அதிவேக வீதி செயற்திட்டத்தின் 03 ஆம் இலக்க பகுதிக்குரிய ஆலோசனைக் கம்பனி மற்றும் ஒப்பந்தக் கம்பனியைத் தெரிவு செய்யும் நடைமுறையானது அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 1.1 ஆம் வழிகாட்டியில் குறிப்பிடப்பட்ட நோக்கங்களுக்கு முரணாக அமுல்ப்படுத்தப்பட்டிருந்தது. அவ்வாறு ஒப்பந்தக்காரர் தெரிவு செய்யப்பட்டு ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்தும் 2018 நவம்பர் மாதம் வரை ஒப்பந்தம் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ii) அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.4.4(1) ஆம் வழிகாட்டியின் பிரகாரம் பதுளை செங்கலடி வீதி செயற்திட்டத்தின் கணியப் பத்திரத்தில் உள்ளடக்கப்பட்ட நிச்சயமற்ற தன்மைகளுக்கான ஒதுக்கீடுகள் மற்றும் நிச்சயமான ஒதுக்கீடுகளின் பெறுமதியை கவனத்தில் கொள்ளாது அசையும் முற்பணங்களாக ரூபா 456 மில்லியன் மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறு செலுத்தப்பட்ட ரூபா 5,928 மில்லியன் மொத்த அசையும் முற்பணங்களின் பெறுமதியை நிர்மாணங்கள் நிறுத்தப்பட்டதன் காரணமாக 2018 செப்தெம்பர் 14 ஆந் திகதி வரை அறவீடு செய்வதற்கு முடியாதிருந்தது.

**(க) சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மத்திய அதிவேக வீதிச் செயற்திட்டத்தின் 03 ஆம் பகுதி தொடர்பாக 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ஒரு ஆலோசனை நிறுவனத்திற்கு சாத்திய வள ஆய்வு அறிக்கையைத் தயாரிப்பதற்கு ரூபா 1,335 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அந்த நிறுவனத்தின் அறிக்கை ஏற்றுக்கொள்ளக் கூடிய நிலையில் காணப்படாததன் காரணமாக இது சம்பந்தமாக பல்வேறு ஆய்வுகளுக்காக வெளிநிறுவனங்களுக்கு ரூபா 97 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. 2018 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரை இறுதி அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) தேசிய பெருந்தெருக்கள் சார்ந்த செயற்திட்டத்தில் பாமங்கடவிலிருந்து கெஸ்பேவ வரை மரங்கள் வளர்ப்பதற்காக ஒரு மரத்திற்கு ரூபா 4,000 இலிருந்து ரூபா 9,667 வரையான உயர் வீச்சுடைய விலைகளின் அடிப்படையில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(iii) ஒருங்கிணைந்த வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கணியப்பட்டியல்களில் குறிப்பிடப்பட்டவாறு மொத்த பெறுமதி (lump sum) விலை விகிதத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 466 மில்லியன் நிலையான சொத்துக்கள் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை உருப்படி சரிபார்ப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்ட சொத்துக்களின் பெறுமதியின் முழுமைத் தன்மை, சரியான தன்மை மற்றும் மதிப்பீடு தொடர்பாக உறுதிப்படுத்திக்கொள்ள முடியாதிருந்தது. இடைக்கால கொடுப்பனவுச் சான்றிதழ்களின் அங்கீகாரமும் சான்றுபடுத்தல்களும் இடம்பெற்ற அடிப்படை தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 உள்நாட்டு நிதிகள் ஈடுபடுத்தப்பட்ட செயற்திட்டங்கள்**

மகநெகும வீதி அபிவிருத்திச் செயற்திட்டத்தின் கீழ் கேகாலை, கண்டி, குண்டசாலை, களுத்துறை ஆகிய நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகங்களுக்குரிய நிர்மாணிக்கப்பட்ட வீதிகள் தொடர்பான கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) கேகாலை, கண்டி மற்றும் திருகோணமலை நிறைவேற்றுப் பொறியியளாளர் அலுவலகம்.**

2016 பெப்ரவரி 25 ஆந் திகதிய MHE & H/HYW /MN/cir – 01/2016 ஆம் இலக்க உயர் கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சின் சுற்றறிக்கை.

(i) சுற்றறிக்கையின் பின்னிணைப்பு A-1 இன் 1.6.6 ஆம் பந்தியின் பிரகாரம் வீதியின் இரண்டு பக்கங்களிலுள்ள வீதி ஓரங்கள் (Shoulders) ஆபத்துக்கள் இல்லாத வகையில் கிறவல் நிரப்பி அமுக்கி தயார்படுத்தப்பட வேண்டுமென கணியப்பட்டியலில் உள்ளடக்கப்பட்டு உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டிருந்தது. எனினும் கேகாலை நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகத்தின் கீழ் பூர்த்தி செய்யப்பட்ட 5 வீதிகள் அதற்கிணங்க செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) சுற்றறிக்கையின் பின்னிணைப்பு A-3 இன் 02 ஆம் பந்தியின் பிரகாரம் Core மாதிரிகளின் அமுக்க வலுவினைப் பரீட்சிப்பது அவசியமானதாக இருந்தும் Core மாதிரிகள் அழிக்கப்படாது வைத்திருக்க வேண்டியிருந்தது. எனினும், Core மாதிரிகளை தெளிவாக இனங்காண்பதற்கு முடியமான வகையில் களஞ்சியப்படுத்தப்பட்டிருக்கவில்லை. கொன்க்கிரீட் Core மாதிரிகளைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் அவற்றைப் பரீட்சிப்பதற்குத் தேவையான உபகரணங்கள் நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகத்திற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

(iii) சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தியின் பிரகாரம் தரப் பரிசோதனை அறிக்கையானது நிவாரணத் தன்மையையும் அதிக நம்பகத் தன்மையையும் பெற்றுக்கொள்ளக் கூடிய 05 நிறுவனங்களைக் குறிப்பிட்டிருந்தது. அவற்றிற்கும் புறம்பாக கேகாலை நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகத்தினால் அபிவிருத்தி செய்யப்பட்ட வீதிகளுக்குரிய தரப்பரிசோதனை அறிக்கையானது சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த

நிறுவனங்களுக்குப் புறம்பாக ஒரு தனியார் நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டு அதற்காக ரூபா 146,383 செலுத்தப்பட்டிருந்தது.

(iv) சுற்றறிக்கையின் பின்னிணைப்பு A-1 இன் 2.3 ஆம் பந்தியின் பிரகாரம் கொங்ரீட் இடப்பட்ட வீதிகளில் கொங்ரீட் இடுதல் 150 mm (6 அங்குலம்) தடிப்பில் காணப்பட வேண்டியிருந்தது. கடுகண்ணாவ நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகத்தில் இடம்பிடியவிலிருந்து. மல்கம்மன வரையான வீதிகளிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட Core மாதிரிகிளின் களம் தரப் பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் 150 mm ஆகக் காட்டப்பட்டிருந்தது. எனினும், வெளிக்களப் பரிசோதனையின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட உள்ளபடியான அளவீடுகளின் பிரகாரம் அந்த களத்தில் இருக்கவில்லை. என்பது அவதானிக்கப்பட்டது. அதற்கிணங்க அந்த களம் இல்லாது நிர்மாணிக்கப்பட்ட வீதிகளக்கு ரூபா 197,874 மொத்த தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(v) சுற்றறிக்கையின் 2.2 ஆம் பந்தியின் பிரகாரம் 150 mm (6 அங்குலம்) கனத்துடனான 1:2:4 என்ற விகிதத்தினைக் கொண்ட கொங்ரீட் கலவைகளுடனான கொங்ரீட் இடப்பட வேண்டியிருந்தது. அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்பதனை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக ஒரு தனியார் நிறுவனத்திடமிருந்து தரப் பரிசோதனை அறிக்கை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அந்த அறிக்கைகளின் சரியான தன்மை உறுதிப்படுத்தப்படாதிருந்த போதிலும் அந்த அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு கொடுப்பனவு செய்யப்பட்டதன் காரணமாக ரூபா 268,637 மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(vi) சுற்றறிக்கையின் பிரகாரம் கிராமிய வீதி அபிவிருத்திச் செயற்திட்டம் சம்பந்தமாக சம்பவக் குறிப்பு புத்தகம் பேணப்பட வேண்டியிருந்தது. எனினும், கேகாலை நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகத்தில் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய ஏனைய உத்தியோகத்தர்கள் செயற்திட்டம் சம்பந்தமாக வெளிக்களப் பரிசோதனைகள் மேற்கொண்டமையினை உறுதிப்படுத்தக்கூடிய வகையில் சம்பவக் குறிப்பு பேணப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) களுத்துறை நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அளுபோமுல்ல மஹகெதரவத்தை வீதியைப் பூர்த்தி செய்வதற்காக 2016 திசெம்பர் 31 ஆந் திகதி ரூபா 405,049 செலுத்தப்பட்டிருந்தது. வீதிக்குரிய பரிசோதனை அறிக்கைகளின் பிரகாரம் கரையோரச் சுவர்களுக்கு கொங்கிரீட் இடுதல் 2017 சனவரி 24 ஆந் திகதி இடம் பெற்றிருந்ததுடன் 2017 சனவரி 31 ஆந் திகதி கொங்கிரீட் பரீட்சிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க வீதியின் வேலையைப் பூர்த்தி செய்வதற்கு முன்னர் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ii) 2016 பெப்ரவரி 25 ஆந் திகதிய MHE&H/HYW/MN/cir – 01/2016 ஆம் இலக்க உயர்கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு செயலாளரின் சுற்றறிக்கையின் பின்னிணைப்பு A-1 இன் 1.5.7 ஆம் பந்தியின் பிரகாரம் இடைச் செருகல் கொங்ரீட் கற்களைப் பரப்பி வீதியை அபிவிருத்தி செய்யும் போது வீதியின் இரண்டு பக்கங்களினதும் கரையோரச் சுவர்களின் உயரம் 300 mm (12 அங்குலம்) இனைக் கொண்டதாக இருக்க வேண்டியிருந்தது. எனினும் 22 வீதிகளின் கரையோரச் சுவர்களின் உயரம் 100 mm களிலிருந்து 280 mm வரையான வீச்சில் காணப்பட்டது.

(iii) 14 வீதிகளின் இரு பக்க கரையோரச் சுவர்கள் மற்றும் வீதியின் இரு கரைகளின் கொங்கிரீட்டுக்களுக்காக கொடுப்பனவு செய்வதற்குரிய அளவீட்டு அறிக்கைகளையும் பௌதீகப் பரிசோதனையின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட அளவீட்டு அறிக்கைகளையும் ஒப்பீடு செய்த போது $27M^3$ கூட்டு மொத்த அளவான கொங்கிரீட்டுக்களுக்காக ரூபா 310,404 மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(iv) அபிவிருத்தி செய்யப்பட்ட வீதியின் கரையோரச் சுவர்களின் தொடக்கத்திலும் இறுதியிலும் செயற்திட்ட திகதியும் இலக்கமும் இடுதல் கட்டாயமாகச் செய்யப்பட வேண்டியிருந்தது. 16 வீதிகளில் அவ்வாறு இலக்கமும் திகதியும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. இக்காரணங்களால் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுடன் மேற்கொள்ளப்பட்ட பௌதீகப் பரிசோதனையின் போது சுட்டிக்காட்டப்பட்ட வீதிகள் இச்செயற்திட்டத்தின் மூலம் நிர்மாணிக்கப்பட்ட வீதிகளா என்பதனை உறுதிப்படுத்துவது சிக்கலான செயற்பாடக இருந்தது.

**2.3 பெறுகை செயற்பாடுகளின் மூலம் வழங்கல் சேவைகளைப் பெற்றுக்கொள்ளல்**

பெருந்தெருக்கள் பிரிவினால் அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டிகளின் பிரகாரம் செயற்பாட்டு உள்நாட்டு வழங்கல்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக ரூபா 53 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் 51 மில்லியன் நிதி ஏற்பாடு மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

**2.3.1 பெறுகை நடைமுறைகளை அமுல்ப்படுத்துதல்**

மீளாய்வாண்டிற்கான பெறுகைத் திட்டத்தின் பிரகாரம் வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்களின் பெறுகைகளின் எண்ணிக்கை 124 ஆக இருந்ததுடன் அவற்றின் பெறுமதி ரூபா 118,232.27 ஆக இருந்தது. எனினும், நடைமுறையில் காணப்பட்ட தாமதங்களின் காரணமாக மீளாய்வாண்டின் போது ரூபா 431 மில்லியன் பெறுமதியான ஒப்பந்தங்கள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது. அதன் செயல்முன்னேற்றம் 0.36 சதவீதம் அளவான குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

**2.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**வருடாந்த பொருள் மெய்மையாய்வினை நடாத்துதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் 3.1.6 ஆம் பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான பொருள் மெய்மையாய்வு அறிக்கை 2017 மார்ச் 17 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அந்த அறிக்கை 7 நாட்கள் தாமதத்தின் பின்னர் 2018 மே 08 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) சொத்துக்கள் மெய்மையாய்வுச் சபை அறிக்கைகளின் பிரகாரம் பௌதீக இருப்பு மீதிக்கும் புத்தகங்களிலுள்ள மீதிக்குமிடையேயான வித்தியாசம் சம்பந்தமாக நிதிப்பிரமாணம் 757(2) மற்றும் (2ஆ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பொருள் மெய்மையாய்வு அறிக்கைகளில் வெளிப்படுத்தப்பட்ட பொருள் குறைவுகள் சம்பந்தமாக நிதிப்பிரமாணம் 760 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.5 கடப்பாடுகளும் பொறுப்புக்களும்

இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) வருடாந்த பாதீட்டு எல்லையை மிகைத்து பொறுப்புக்களை ஏற்படுத்துதல்

2017 ஏப்ரல் 27 ஆந் திகதிய 255/2017 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் 02(அ) பந்திக்கு இணக்கமற்ற வகையில் 06 செலவு விடயங்களுக்காக வழங்கப்பட்ட ரூபா 61,454 மில்லியன் நிதி ஏற்பாட்டை ரூபா 15,849 ஆல் மில்லியனால் மிகைத்து ரூபா 77,303 மில்லியன் கடப்பாடுகளை ஏற்படுத்தியிருந்தது.

### (ஆ) பாதீட்டு நிதி ஏற்பாடுகளின்றி அடுத்துவரும் ஆண்டின் போது கொடுப்பனவு செய்வதற்காக பொறுப்புக்களை ஏற்படுத்துதல்.

2013 ஒக்தோபர் 27 ஆந் திகதி கொழும்பு – கட்டுநாயக்கா அதிவேக வீதி பொது மக்களுக்காக திறந்து வைக்கப்பட்டிருந்தது. அந்த வீதியை நிர்மாணிப்பது தொடர்பாக 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 48.47 மில்லியன் பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தது. 2018 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் செயற்திட்டங்களுக்கான பொறுப்புக்களைத் தீர்த்து வைப்பதற்காக நிதி ஏற்பாடு வழங்கப்படாதிருந்தும் 2017 ஏப்ரல் 27 அந் திகதிய 255/2017 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையிலுள்ள ஒழுங்கு விதிகளுக்கு முரணாக நிதி ஏற்பாடுகளின்றி அப்பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

## 2.6 நட்டங்களும் சேதங்களும்

நிதிப்பிரமாணம் 102(1) (இ) மற்றும் 102 (2)(இ) இன் பிரகாரம் அறிக்கையிடப்பட்ட ரூபா 6.35 மில்லியன் நட்டம் பெருந்தெருக்கள் பிரிவில் இடம் பெற்றிருந்தும் அந்த நட்டங்கள் நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் சேதங்கள் தொடர்பான பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.7 சேதங்கள் தொடர்பான பொறுப்பு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1986 ஆம் ஆண்டின் போது வீதிப் பராமரிப்பு நடவடிக்கைகளின் இருப்பு தொடர்பாக அறிக்கையிடப்பட்டிருந்த ரூபா 168,000 தொகையான நட்டம் சம்பந்தமாக நிதிப் பிரமாணம் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டு வரை 13 வாகன விபத்துக்கள் அறிக்கையிடப்பட்டிருந்தன அவற்றில் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது இரண்டு உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு இடம் பெற்ற விபத்துக்களின் மதிப்பீடு செய்யப்பட்ட நட்டம் முறையே ரூபா 4.07 மில்லியன் மற்றும் ரூபா 1.16 மில்லியனாக இருந்தன. அந் நட்டங்கள் சம்பந்தமாக 2018 யூன் மாதம் வரை காப்புறுதி இழப்பீடு பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இது சம்பந்தமாக நிதிப்பிரமாணம் 104 மற்றும் 109 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. விபத்துக்குள்ளாகிய வாகனங்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 104 (4) இன் பிரகாரம் விபத்து இடம் பெற்று 03 மாதங்களுக்குள் முழுமையான அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 08 வாகனங்களை தவிர்த்து எஞ்சிய வாகனங்கள் சம்பந்தமாக முழுமையான அறிக்கை 02 வாரங்களிலிருந்து 08 மாதங்கள் வரையான வீச்சுடைய காலம் தாமதித்து சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. எனினும், 08 வாகனங்கள் சம்பந்தமான விபத்துக்கள் தொடர்பான முழுமையான அறிக்கை 2018 யூன் மாதம் வரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.8 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

2014 ஆம் ஆண்டின் போது ரூபா 34.69 மில்லியன் செலவு செய்து மகநெகும செயற்திட்டத்தின் கீழான கிராமிய வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் நடவடிக்கைகளை ஆக்கபூர்வமாக, விளைதிறனாக நிறைவேற்றும் குறிக்கோளுடன் புவியியல்தகவல் முறைமை (GIS) அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மையின் (ICTA) Policy & Procedures for ICT Usage in Government இன் பிரகாரம் ரூபா 2 மில்லியனுக்கு மேற்பட்ட தகவல்கள் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் தொடர்பான செயற்திட்டத்தை அமுல்ப்படுத்துவதற்கு முன்னர் ICTA நிறுவனத்தினால் தேவையான தொழில்நுட்ப ஆலோசனைகள் பெற்றுக் கொள்ளப்பட வேண்டியிருந்தது. அந்த ஆலோசனைகள் பெற்றுக்கொள்ளப்படாது அந்த முறைமை அமுல்ப்படுத்தப்பட்டிருந்தது.

## 2.9 பொது மக்களுக்கான சேவைகளை நிறைவேற்றுதல்

அமைச்சின் பெருந்தெருக்கள் பிரிவிற்காக இணைய தளத்தை நிர்மாணித்தல், அதன் மூலம் தேவையான தெளிவுபடுத்தல்கள் மற்றும் பொது மக்களிடமிருந்து முறைப்பாடுகளைப் பெற்றுக்கொள்ளும் நடைமுறை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.10 செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்துதல்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த 05 ஆண்டுகள் காலத்தில் பெருந்தெருக்கள் பிரிவிற்கு வழங்கப்பட்ட நிதி ஏற்பாடு, பயன்பாடு, சேமிப்பு என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | செலவின வகை | தேறிய நிதிஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | |
| 2013 | மீண்டெழுபவை | 264.32 | 263.29 | 1.03 | 0.38 |
| | மூலதனம் | 131,661.02 | 129,882.89 | 1,778.13 | 1.35 |
| | **மொத்தம்** | **131,925.34** | **130,146.18** | **1,779.16** | **1.34** |
| 2014 | மீண்டெழுபவை | 427.52 | 361.39 | 66.13 | 15.46 |
| | மூலதனம் | 142,894.75 | 132,171.56 | 10,723.19 | 7.5 |
| | **மொத்தம்** | **143,322.27** | **132,532.95** | **10,789.32** | **7.52** |
| 2015 | மீண்டெழுபவை | 228.82 | 219.66 | 9.16 | 3.17 |
| | மூலதனம் | 201,771.70 | 177,173.99 | 24,597.71 | 12.19 |
| | **மொத்தம்** | **202,000.52** | **177,393.65** | **24,606.87** | **11.88** |
| 2016 | மீண்டெழுபவை | 260.52 | 245.04 | 15.48 | 5.94 |
| | மூலதனம் | 173,125.48 | 145,844.58 | 27,280.90 | 15.75 |
| | **மொத்தம்** | **173,386.00** | **146,089.62** | **27,296.38** | **15.74** |
| 2017 | மீண்டெழுபவை | 274.73 | 228.71 | 46.02 | 16.75 |
| | மூலதனம் | 205,975.71 | 191,810.34 | 14,165.37 | 6.87 |
| | **மொத்தம்** | **206,250.44** | **192,039.05** | **14,211.39** | **7.00** |

மீளாய்வாண்டிற்காக வழங்கப்பட்ட நிதி ஏற்பாடு மற்றும் பயன்பாடு சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) வழங்கப்பட்ட நிதி ஏற்பாடு பயன்படுத்தப்படாமை.**

14 செலவு விடயங்களுக்காக வழங்கப்பட்ட ரூபா 733.2 மொத்த தேறிய நிதி ஏற்பாடு எதுவித பயன்பாடுமின்றி முழுமையாகச் சேமிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) மிகை நிதி ஏற்பாடு வழங்குதல்**

46 செலவு விடயங்களுக்காக ரூபா 13,437.4 மில்லியன் கூட்டு மொத்தமான மிகை நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தன் காரணமாக அச் செலவு விடயங்களுக்குரிய நிதி ஏற்பாட்டில் ரூபா 7,516.1 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டதன் காரணமாக சேமிப்பானது வழங்கப்பட்ட தேறிய நிதி ஏற்பாட்டில் 25 சதவீதத்திலிருந்து 99 சதவீதம் வரையான வீச்சுடைய அளவினைக் கொண்டிருந்தன.

**(இ) குறை நிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீட்டின் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட நிதி ஏற்பாடுகள் பயன்படுத்தப்படாமை.**

05 செலவு விடயங்களுக்காக வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டில் வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகள் போதியளவில் இல்லை எனக் குறிப்பிடப்பட்டிருந்தும் குறைநிரப்பு பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் ரூபா 21,865 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் இறுதி வரை அவற்றிலிருந்து எதுவும் பயன்படுத்தப்படாது அந் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

**(ஈ) ஏனைய அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாவட்ட செயலகங்கள் என்பவற்றில் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்துதல்**

ஏனைய 02 அமைச்சுக்கள் மற்றும் ஒரு மாவட்ட செயலகத்தால் பல்வேறு செயற்பாடுகளுக்காக முறையே ரூபா 302 மில்லியன் ரூபா 205 மில்லியன் மற்றும் ரூபா 2,473.7 மில்லியன் ஆக ரூபா 2,980.7 மில்லியன் கூட்டு மொத்த தொகையான நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் இறுதி வரை அந்த நிதி ஏற்பாட்டில் ரூபா 2,802 மில்லியன் மொத்த தொகையான நிதி ஏற்பாடு மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தன. அதற்கிணங்க வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டில் ரூபா 178.5 மில்லியன் அல்லது 7.2 சதவீதமான நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. அது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) பெருந்தெருக்கள் பிரிவிலிருந்து மீள் எழுச்சி பொலனறுவை நிகழ்ச்சித்திட்டத்திற்காக வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்கப்பட்ட கடன் பணத்திலிருந்து ரூபா 351.33 மில்லியன் கடன் மீதி 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை காணப்பட்டிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டது. எனினும் அத் திகதியில் உள்ளவாறான வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நிதிக்கூற்றுக்களில் அக்கடன் மீதி ரூபா 91.18 மில்லியனாகக் காட்டப்பட்டிருந்தது.

(ii) சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வு மீள் குடியேற்றம் மற்றும் இந்து சமய விவகார அமைச்சிடமிருந்து ரூபா 302 மில்லியன் மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்டிருந்தது. அவற்றில் ரூபா 168.2 மில்லியன் மாத்திரம் உரிய செயற்பாடுகளுக்காகச் செலவு செய்யப்பட்டிருந்தது.

**2.11 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

இடமாற்றம் பெற்றுச் சென்ற 04 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 292,322 மொத்த தொகையான கடன் மீதிகள் அறவிட வேண்டிக் காணப்பட்டது. 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட

காலமாகக் காணப்பட்டு வரும் இக் கடன் மீதி மீளாய்வாண்டின் இறுதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.12 பொது வைப்புக் கணக்குகள்**

அமைச்சின் பெருந்தெருக்கள் பிரிவின் கீழுள்ள 04 பொது வைப்புக் கணக்குகளில் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் மொத்தம் ரூபா 298.22 மில்லியனாகும். அது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2 ஆண்டுகளை மிகைத்த (காணிகள் வைப்புக்களைத் தவிர்த்து) ரூபா 30.10 மில்லியன் கூட்டு மொத்தமான 310 வைப்புக்கள் சம்பந்தமாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிப்பிரமாணம் 215(3) இலுள்ள ஒழுங்கு விதிகளின் பிரகாரம் திறைசெரியின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளாது அமைச்சினால் ரூபா 173.6 மில்லியன் செலவுக் கணக்கிற்கு வரவு வைத்து பொது வைப்புக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது.

**2.13 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை**

பெருந்தெருக்கள் பிரிவினால் கீழே தரப்பட்டுள்ள சில பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன் சில பதிவேடுகள் முறைப்படியாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை என்பது தெரிவுக்கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | **பதிவேட்டின் வகை** | **உரிய நிதிப்பிரமாணம்** | **அவதானிப்புக்கள்** |
|---|---|---|---|
| (அ) | இருப்பு புத்தகம் | நிதிப்பிரமாணம் 757 மற்றும் 763 | பேணப்பட்டிருக்கவில்லை |
| (ஆ) | பிணைப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 891(i) | - மேற்படி - |
| (இ) | மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 454(2) | - மேற்படி - |
| (ஈ) | பொறுப்புக்கள் பதிவேடு | நிதிப்பிரமாணம் 214 | - மேற்படி - |
| (உ) | சேதங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 | நாளது வரையாகப் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | கணனி உபகரணங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பான பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய AIA/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | - மேற்படி - |

**2.14 இணக்கமின்மைகள்**

**2.14.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஒழுங்கு விதிகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை | |
| | XV ஆம் அத்தியாயத்தின் 10.1(ஆ) பிரிவு | அமைச்சின் இரண்டு மேலதிக செயலாளர்கள் 03 சந்தர்ப்பங்களின் போது வெளிநாடு சென்றிருந்தும் நாட்டிலிருந்து வெளியே செல்வதற்காக பிரதம மந்திரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | திறைசேரி சுற்றறிக்கை | |
| (i) | 2017 திசெம்பர் 31 ஆந் திகதிய 02/2017 ஆம் இலக்க நிதி மற்றும் வெகுசன ஊடகத்துறை அமைச்சின் சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை 02 (ii) பிரிவு | வாகனம் பதிவு செய்யப்பட்டுள்ள அமைச்சு இரத்துச் செய்யப்பட்டிருந்தும் அச் செயற்பாடுகளும் நடவடிக்கைகளும் ஒப்படைக்கப்பட்டுள்ள அமைச்சின் பெயரில் 18 வாகனங்களையும் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | 2001 யூலை 02 ஆந் திகதிய MF/GA2/சுற்றறிக்கை/2001/03 ஆம் இலக்க நிதி அமைச்சின் சுற்றறிக்கை | மீளாய்வாண்டின் போது பெருந்தெருக்கள் பிரிவின் உத்தியோகத்தர்கள் 22 சந்தர்ப்பங்களின் போது பயிற்சிகள் மற்றும் கருத்தரங்குகளுக்காக வெளிநாடு சென்றிருந்ததுடன் ஒரு சந்தர்ப்பத்தின் போது ஒரு உத்தியோகத்தரால் பெற்றுக்கொள்ளப்பட்ட பயிற்சிகள் தொடர்பான விபரத்தை உள்ளடக்கிய அறிக்கை மீளாய்வாண்டின் இறுதி வரையும் நிதி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளருக்கு (ஊழியர் தொடர்பு) சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

**2.14.2 ஒப்பந்தங்கள் சம்பந்தமாக வரி அறவீடு செய்தல்**

2006 இன் 10 ஆம் இலக்க தேசிய உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டம் தொடர்பாக 2014 யூலை 25 ஆந் திகதிய SEC/2014/05 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி ஆணையாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் உழைக்கும் போதே செலுத்தும் வரியானது உரிய சேவை தருனரினால் செலுத்தப்பட வேண்டியிருந்தது. ஒருங்கிணைந்த வீதிகள் முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம், கொழும்புக்கு வெளியேயுள்ள சுற்றுவட்ட அதிவேக வீதி, (கடவத்தையிலிருந்து கெரவலபிடிய வரை) தேசிய வீதி வலையமைப்பின் பிரதான பாலம் நிர்மாணிக்கும் செயற்திட்டம் மற்றும் இரண்டாவது களணிப்பாலம் நிர்மாணிக்கும் செயற்திட்டம் ஆகிய வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்களின் வெளிநாட்டு ஆலோசகர்களுக்காக உழைக்கும் போதே செலுத்தும் வரி ரூபா 9.24 மில்லியன் தொகை செயற்திட்டத்தால் செலுத்த வேண்டியதான கடப்பாடாகக் காட்டப்பட்டிருந்தது. அவ்வாறே ஒருங்கிணைந்த வீதி முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தினால் மீளாய்வாண்டின் போது உழைக்கும் போதே செலுத்தும் வரியாக ரூபா 16 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

**2.15 உள்ளகக் கணக்காய்வு**

2017 ஆம் ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தின் பிரகாரம் 23 கணக்காய்வு ஒப்படைப்புக்களை அமுல்ப்படுத்த வேண்டியிருந்தது. 2018 யூன் 31 ஆந் திகதி வரை 12 ஒப்படைப்புக்கள் மாத்திரம் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன. மேலும், பெருந்தெருக்கள் பிரிவின் கீழ் அமுல்ப்படுத்தப்படுகின்ற 11 செயற்திட்டங்கள் சம்பந்தமான உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**2.16 மனித வளங்கள் முகாமைத்துவம்**

**இணைத்துக் கொள்ளப்பட்ட பதவியணியினர், உள்ளபடியான பதவியணியினர், மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவுகள்**

பெருந்தெருக்கள் பிரிவின் கடமைகளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரித்த, உள்ளபடியான, மற்றும் வெற்றிடமான பதவியணியினர் தொடர்பான விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 28 | 21 | 07 |
| (ii) | மூன்றாம் மட்டம் | 03 | 01 | 02 |
| (iii) | இரண்டாம் மட்டம் | 280 | 245 | 35 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 38 | 25 | 13 |
| (v) | அமையம் / ஒப்பந்தம் | 04 | 04 | - |
| | **மொத்தம்** | **353** | **296** | **57** |

இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) வீதி அபிவிருத்தி அதிகார சபையின் ஊழியர்களை அமைச்சின் நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்துதல்.**

மீளாய்வாண்டின் போது வீதி அபிவிருத்தி அதிகார சபையின் 34 ஊழியர்கள் பெருந்தெருக்கள் பிரிவின் நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

**(ஆ) முறையற்ற வகையில் ஏனைய தரப்பினர்களுக்கு விடுவிக்கப்பட்ட மனித வளங்கள்**

பெருந்தெருக்கள் பிரிவினால் 157 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் 4 ½ ஆண்டுகள் காலமாக வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு விடுவிக்கப்பட்டிருந்தனர்.

**2.17 அரசாங்க உத்தியோகத்தர்கள் பிணை வைத்தல்**

நிதிப்பிரமாணம் 880 இன் பிரகாரம் பெருந்தெருக்கள் பிரிவு மற்றும் அதன் கீழுள்ள 39 செயற்திட்டங்களின் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்களால் பிணை வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 2 ஆம் பகுதி – உயர் கல்விப் பிரிவு

### 3. பொருண்மையான மற்றும் முகாமைத்துவ கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 செயலாற்றல்

### 3.1.1 விடுதி நிர்மாணங்கள் செயற்திட்டம்

விடுதி மாணவர்களின் எண்ணிக்கையை 12,000 ஆல் அதிகரிப்பதற்காக மாணவர் விடுதி வசதிகளை மேம்படுத்தும் குறிக்கோளுடன் அரசாங்க பல்கலைக்கழக முறைமைக்குள் ஒரு விடுத்திக்காக ரூபா 220 மில்லியன் சராசரி செலவு மதிப்பீடு செய்யப்பட்டு 2017 ஆம் ஆண்டின் போது III ஆம் கட்டத்தின் கீழ் 24 விடுதிகளை நிர்மாணிக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) விடுதிகளை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் III ஆம் கட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற 24 விடுதிகளில் 07 விடுதிகளின் பௌதீக செயல் முன்னேற்றம் நூறு சதவீதமாகக் காணப்பட்டதுடன் எஞ்சிய 17 விடுதிகளின் அனைத்து நிர்மாண நடவடிக்கைகளும் 2018 செப்தெம்பர் மாதம் இறுதி வரை பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. எவ்வாறாயினும், 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அந்த 24 விடுதிகளின் நிர்மாண நடவடிக்கைகளின் பௌதீக செயல் முன்னேற்றம் 17 சதவீதத்திலிருந்து 99 சதவீதம் வரையான அளவில் காணப்பட்டது.

(ஆ) விடுதி நிர்மாண ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் பல்கலைக்கழகங்களுக்கு உரிய கட்டிடங்கள் ஒப்படைக்கப்பட்டதன் பின்னர் ஒரு ஆண்டிற்குள் அக் கட்டிடங்களை பயன்படுத்துவதன் மூலம் நிர்மாணங்களிலுள்ள குறைபாடுகளை இனங்கண்டு அக் குறைபாடுகளை ஒப்பந்தக்காரர்களுக்குத் தெரிவித்ததன் பின்னர் உரிய சரி செய்தல்களைச் செய்ய முடியுமாக இருந்தது. எவ்வாறாயினும், அனைத்து வேலைகளும் முடிவுறுத்தப்பட்ட 07 விடுதிகளை மாணவர்களுக்கு ஒப்படைப்பதற்கு 01 ஆண்டிலிரந்து 01 ½ ஆண்டுகள் வரையான காலம் எடுத்ததன் காரணமாக குறைபாடுகளை இனங்காண்கின்ற உடன்படிக்கை செய்த காலத்தை கடந்திருந்தது.

(இ) விடுதிக் கட்டிடங்களை நிர்மாணிக்கும் நடவடிக்கைகளுக்கு புறம்பாக தளபாடங்கள் உபகரணங்களை வழங்குதல், நீர் மற்றும் மின்சார இணைப்புக்களை வழங்குதல் மற்றும் இடிதாங்கியை நிறுவுதல் ஆகிய உட்கட்டமைப்பு வசதிகள் நிர்மாணங்களை பூர்த்தி செய்வதற்கு சமாந்தரமாக நிறைவேற்றுவது தொடர்பான பொறுப்பு உரிய பல்கலைக்கழங்களின் துணை வேந்தர்களுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தன. எனினும், அச் செயற்பாடுகளை நிறைவேற்றுவது சம்பந்தமான பின்தொடர் நடவடிக்கை எடுக்கும் பொறுப்பு உயர் கல்விப் பிரிவிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. அச் செயற்பாடுகளும் பொறுப்புக்களும் உரிய முறையில் நிறைவேற்றப்படாததன் காரணமாக விடுதிகளை மாணவர்களுக்கு ஒப்படைக்க முடியாதிருந்தன.

### 3.1.2 திட்டமிடுதல்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்தம் செயல்நடவடிக்கைத் திட்டத்தை தயாரித்து சமர்ப்பிக்க வேண்டியிருந்தும் பின்வரும் அவதானிப்புக்களின் பிரகாரம் அந்த ஒழுங்கு விதிகளுக்கு இணக்கமான வகையில் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(அ) உயர் கல்விப் பிரிவின் கீழ் அமுல்ப்படுத்தப்படுகின்ற 13 வெளிநாட்டுச் செயற்திட்டங்களின் இலக்குகளும் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளும் அதில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான நாளது வரையாக்கப்பட்ட உயர் கல்விப் பிரிவின் தாபனக் கட்டமைப்பு, அங்கீகரித்த பதவியணியினர், தற்பொழுது சேவையில் ஈடுபட்டுள்ள பதவியணியினர் என்பன தொடர்பான விபரம் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டிற்கான வருடாந்த பாதீட்டை அடிப்படையாகக் கொண்ட முன்னுரிமையின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டம், அமுல்ப்படுத்தும் கால அட்டவணை, அதன் செயற்பாடுகளின் எதிர்பார்த்த விளைவுகள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டு காட்டப்பட்டிருக்கவில்லை.

### 3.1.3 செயற்பாடுகள் நிறைவேற்றப்படாமை

**(அ) செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட செயற்பாடுகள் நிறைவேற்றப்படாமை.**

செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் அமைச்சினால் 07 பிரதான குறிக்கோள்கள் நிறைவேற்றப்பட வேண்டியிருந்தும் அவற்றில் சில குறிக்கோள்கள் மாத்திரம் நிறைவேற்றப்படாதிருந்தன. செயல் நடவடிக்கைத் திட்டத்தில் ஒவ்வொரு குறிக்கோள்களின் கீழ் வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகள் குறிப்பிடப்பட்டிருக்காததனால் நிறைவேற்றப்படாத குறிக்கோள்களுக்காக வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டை உறுதிப்படுத்திக்கொள்ள முடியாதிருந்தது.

**(ஆ) எதிர்பார்த்த பூர்த்தியாக்கல் மட்டத்தை பெற்றுக் கொள்ளாமை.**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட இலக்குகளின் கீழ் கற்கை நெறிகளின் சிறந்த தரத்தை மேம்படுத்துவதன் மூலம் பட்டதாரிகளை தொழிலில் ஈடுபடுத்தலினை மேம்படுத்துவதற்கான 03 குறிக்கோள்களின் கீழ் இலக்குகளை அடைந்து கொள்வதற்கு திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருந்தன. அது சம்பந்தமாக பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

- **பட்டதாரிகள் தொழிலில் ஈடுபடுதலினை மேம்படுத்துதல் மற்றும் கலாநிதி பட்டத்திற்காக பல்கலைக்கழக கல்விசார் பதவியணியினரை அதிகரிக்கும் குறிக்கோள்.**

  2014 ஆம் ஆண்டின் போது 59 சதவீதமாகக் காணப்பட்ட பட்டதாரிகள் தொழிலில் ஈடுபடுதல் 2017 ஆம் ஆண்டில் 60 சதவீதம் வரை அதிகரிப்பதற்கும் 2014 ஆம் ஆண்டின் போது 45.1 சதவீதமாகக் காணப்பட்ட கலாநிதிப்பட்டத்திற்கான தகைமைகளைக் கொண்ட பல்கலைக்கழக கல்விசார் பதவியணியினரை 2017 ஆம் ஆண்டின் இறுதியளவில் 51 சதவீதம் வரை அதிகரிப்பதற்கும் திட்டமிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இலக்குகளின் செயலாற்றல் மட்டத்தை பரீட்சிப்பதற்குரிய நடைமுறையினை உயர் கல்விப் பிரிவு அல்லது பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழு தயாரித்திருக்கவில்லை.

- **அரசாங்க பல்கலைக்கழகங்களை உலக தரத்திற்கு இணங்க உயர்ந்த தரத்திற்கு கொண்டுவருகின்ற குறிக்கோள்**

  பல்கலைக்கழகங்களுக்குரிய உலக தரப்படுத்தலின் பிரகாரம் ஆகக் குறைந்தது 03 அரசாங்க பல்கலைக்கழகங்களை தொடக்க 1000 இற்கு இடையிலும் மேலும் 03 பல்கலைக்கழகங்களை தொடக்க 2000 இற்கு இடையிலும் எஞ்சியுள்ளவைகளை தொடக்க 5000 இற்கு இடையிலும்

வைத்திருப்பதற்கு நடவடிக்கை எடுப்பது குறிக்கோளாக இருந்தது. எவ்வாறாயினும், 2015 ஆம் ஆண்டில் காணப்பட்ட நிலைமையை 2017 ஆம் ஆண்டின் போது அடைந்து கொள்ளப்பட்டுள்ள தரத்துடன் ஒப்பிடும் போது திட்டத்திற்கு உள்ளடக்கப்பட்ட 06 பல்கலைக்கழகங்களில் 05 பல்கலைக்கழகங்களை உலக தரப்படுத்தலுக்கு உட்படுத்தும் போது காணப்பட்ட தரத்தினை விட குறைந்த தரத்தினைக் கொண்டிருந்தன. அது 10 சதவீதத்திலிருந்து 20 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது.

- **அரசாங்க மற்றும் அரச சார்பற்ற பல்கலைக்கழகங்களில் வெளிநாட்டு மாணவர்களுக்காக புலமைப் பரிசில்களை வழங்கும் குறிக்கோள்.**

  ---------------------------------------------------------------------------------------------------------------

  உள்நாட்டு பல்கலைக்கழகங்களை உலக தரப்படுத்தலுக்குள் உயர்ந்த தரத்திற்கு கொண்டு வரும் குறிக்கோளுடன் அரசாங்க மற்றும் அரச சார்பற்ற பல்கலைக்கழகங்களில் வெளிநாட்டு மாணவர்களுக்கு புலமைப்பரிசில்களை வழங்குதல் அதிகரித்திருந்தது. எவ்வாறாயினும் 2011 ஆம் ஆண்டிலிருந்து 2017 ஆம் ஆண்டு வரையான 07 ஆண்டு காலப்பகுதியை கவனத்திற்கு எடுத்துக் கொண்ட போது 2011 ஆம் ஆண்டின் போது 05 புலமைப்பரிசில்களானது 2013 ஆம் ஆண்டளவில் அது 44 வரை அதிகரித்திருந்தும் அதற்குப் பிந்திய ஆண்டுகளின் போது படிப்படியாகக் குறைவடைந்து 2016 ஆம் ஆண்டிலும் 2017 ஆம் ஆண்டிலும் மாணவர்களின் எண்ணிக்கை முறையே 07 மற்றும் 13 வரை குறைவடைந்திருந்தன.

**(ii) 900 மேலதிக மாணவர்களை தொழில்நுட்ப பாடநெறிக்கு சேர்த்துக்கொள்ளுதல்**

---------------------------------------------------------------------------------------------------------------

பாதீட்டு பிரேரணையின் பிரகாரம் தொழில்நுட்ப கற்கை நெறிக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையை 2017 ஆம் ஆண்டின் போது 900 ஆல் அதிகரித்தலை பிரதான செயலாற்றல் குறிகாட்டியாகக் கருதி 11 பல்கலைக்கழகங்களுக்கு 2016 மற்றும் 2017 ஆகிய 02 ஆண்டுகளுக்காக முறையே ரூபா 1500 மில்லியன் மற்றும் ரூபா 700 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2017 ஆம் ஆண்டில் தொழில்நுட்ப கற்கை நெறிக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 260 ஆல் குறைவடைந்திருந்தது.

**(iii) 50 உத்தியோகபூர்வ இல்லங்களை நிர்மாணித்தல்**

---------------------------------------------------------------------------------

2016 பாதீட்டு பிரேரணையின் பிரகாரம் பல்கலைக்கழக பதவியணியினருக்காக உத்தியோகபூர்வ இல்லங்களை வழங்கும் செயற்திட்டத்தின் கீழ் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் 51 உத்தியோகபூர்வ இல்லங்களை நிர்மாணிக்கும் இலக்கை அடைந்து கொள்வதற்காக ரூபா 300 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. அந்த நிதி ஏற்பாடு 09 பல்கலைக்கழகங்களுக்கு 50 உத்தியோகபூர்வ இல்லங்களையும் மாணியங்கள் ஆணைக்குழுவிற்கு ஒரு உத்தியோக பூர்வ இல்லத்தையும் வழங்குதற்குத் திட்டமிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் 51 உத்தியோகபூர்வ இல்லங்களில் 22 உத்தியோகபூர்வ இல்லங்களின் பௌதீக செயல் முன்னேற்றம் 60 சதவீதத்தினைவிடக் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

**(iv) 150 கலாநிதிப் பட்டங்களையும் 50 முதுமானிப்பட்டங்களையும் வழங்குதல்**

---------------------------------------------------------------------------------------------------------------

2017 பாதீட்டு பிரேரணையின் பிரகாரம் மானிட மூலதனத்தை அபிவிருத்தி செய்வதற்காக கல்விசார் பதவியணியினர்களுக்காக 150 கலாநிதிப் பட்டங்களையும் (Phd) 50 புதிய பட்டபின்படிப்பு பட்டங்களையும் வழங்குவதனை இலக்காகக் கொண்டு 2017 ஆம் ஆண்டின் பொது ரூபா 34.37 மில்லியன்

செலவு செய்யப்பட்டிருந்தது. எனினும், 74 கலாநிதிப்பட்டங்களும் 19 பட்டபின்படி பட்டங்களும் ஆக குறைந்த அளவான பட்டங்களே வழங்கப்பட்டிருந்தன.

### 3.1.4 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் உயர் கல்விப் பிரிவினால் நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட வேண்டிய போதிலும் அந்த அறிக்கை 2018 ஆகஸ்ட் 15 ஆந் திகதி வரை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 அமுல்ப்படுத்தப்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்கள்

மீளாய்வாண்டின் போது உயர் கல்விப் பிரிவினால் உள்நாட்டு நிதியை ஈடுபடுத்தி அமுல்பபடுத்தப்பட்ட 06 செயற்திட்டங்களுக்காக ரூபா 5,259.6 மில்லியன் கூட்டு மொத்தமான தேறிய நிதி ஏற்பாடு மற்றும் 13 வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்களுக்காக ரூபா 1837.5 மில்லியன் தேறிய நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டின் இறுதி வரை அவற்றில் முறையே ரூபா 4,047.5 மில்லியன் மற்றும் ரூபா 754.6 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க வழங்கப்பட்ட மொத்த தேறிய நிதி ஏற்பாட்டில் ரூபா 2,285 மில்லியன் அல்லது 32 சதவீதமான நிதி ஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.2.1 வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்கள்

**வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்களின் செயலாற்றல்**

அமுல்ப்படுத்தப்பட்ட 13 வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்களுக்காக மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டில் ரூபா 1,082.90 மில்லியன் அல்லது நிதி ஏற்பாடுகளில் 58.9 சதவீதமான நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க செயற்திட்டத்திற்காக வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டை வினைத்திறனாகவும் ஆக்கபூர்வ மானதாகவும் பயன்படுத்துவதற்கு முடியாமை தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய பின்தொடர் நடவடிக்கைகளில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி செயற்திட்டம் மற்றும் சுத்தமான வலு தொழில்நுட்பத்திற்கான சட்டப் பொருட்கள் தொடர்பான உயர் கல்வி மற்றும் ஆராய்ச்சி ஒத்துழைப்பு ஆகிய 02 செயற்திட்டங்களின் பௌதீக செயல் முன்னேற்றமானது மீளாய்வாண்டின் இறுதியளவில் 05 சதவீதமளவுக்கு குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

(ஆ) கிழக்கு பல்கலைக்கழகத்தின் சுகாதாரப் பாதுகாப்பு கல்வி பீடத்திற்கான கட்டிடத் தொகுதியை நிர்மாணிக்கும் செயற்திட்டம் மற்றும் சிறந்த சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்துக்களின் மூலம் புதிய இளைஞர் மரணங்கள் ஆபத்துக்களைக் குறைத்தல் ஆகிய செயற்திட்டங்களின் பௌதீக செயல் முன்னேற்றம் முறையே 10 சதவீதம் மற்றும் 25 சதவீதம் ஆகிய குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

(இ) வசோ ஏசியா செயற்திட்டத்திற்காக 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 20.6 மில்லியன் ரூபா 25.0 மில்லியன் மற்றும் ரூபா 30.0 மில்லியனாக நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டின் இறுதியளவில் செயற்திட்டத்தின் பௌதீக செயல் முன்னேற்றம் 52 சதவீதம் அளவாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் 65 சதவீதம் அளவாக இருந்தது. அதற்கிணங்க மீளாய்வாண்டின் போது 13 சதவீதம் ஆகிய ஆகக் குறைந்த பெறுமதியில் செயற்திட்டம் முன்னேற்றமடைந்திருந்தது.

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

உயர் கல்விப் பிரிவின் சொத்துக்கள் சம்பந்தமாக மேற்கொண்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

### (அ) வாகனப் பயன்பாடு

உயர் கல்விப் பிரிவிற்கு மீளாய்வாண்டின் இறுதியளவில் பின்வருமாறு 26 வாகனங்கள் காணப்பட்டதுடன் அவ்வாகனங்கள் 349,095.8 கிலோ மீற்றர்கள் ஓடியிருந்தன. அதற்கான எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கி எண்ணைகளுக்காக ரூபா 7,267,642 தொகையும் வாகனங்களை சேவை செய்வதற்காக ரூபா 1,241,420 தொகையும் வாகனங்களைப் பழுதுபார்ப்பதற்காக ரூபா 3,050,920 தொகையும் வாகனங்களைக் காப்புறுதி செய்வதற்காக ரூபா 2,422,540 தொகையுமாக ரூபா 13,982,522 மொத்த தொகை செலவு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க அமைச்சினால் வாகனங்கள் ஓடுவதற்கான சாரதிகள் சம்பளம் மற்றும் படிகளைத் தவிர்த்து ஒரு கிலோ மீற்றருக்கு ரூபா 40 செலவு செய்யப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (i) எரிபொருள் எரிதல் பரீட்சிக்கப்படாமை

2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியின் பிரகாரம் அமைச்சின் உயர் கல்விப் பிரிவிற்குரிய 24 வாகனங்களின் எரிபொருள் எரிதல் தொடர்பான பரிசோதனைகள் மீளாய்வாண்டின் போது இடம் பெற்றிருக்கவில்லை.

### (ii) வாகனங்களைப் பழுதுபார்த்தல்

2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் 4 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து வாகனங்களைப் பழுதுபார்த்தல்கள் ஆக்கபூர்வமாகச் செய்யப்பட வேண்டிய போதிலும் உயர்கல்விப் பிரிவிற்குரிய 03 வாகனங்களைப் பழுதுபார்க்கும் நடவடிக்கையைப் பூர்த்தி செய்வதற்கு 01 ஆண்டிலிருந்து 1 ½ ஆண்டுகள் வரையான வீச்சுடைய காலம் தாமதமடைந்திருந்தது.

### (ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வினை நடாத்துதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பொருள் மெய்மையாய்வின மேற்கொண்டு அந்த அறிக்கையை 2018 மார்ச் 17 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் ரூபா 284.52 மில்லியன் பெறுமதியான 24 வாகனங்கள் மீளாய்வு செய்யப்பட்டு அந்த அறிக்கை 04 மாதங்கள் அளவான தாமதத்தின் பின்னர் 2018 யூலை 25 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ii) 2017 ஆம் ஆண்டிற்கான மீளாய்வுச் சபை அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்ட 66 விடயங்களின் மிகைகளும் 360 விடயங்களின் குறைவுகளும் சம்பந்தமாக நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4 கடப்பாடுகளும் பொறுப்புக்களும்**

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சின் உயர் கல்விப் பிரிவினால் தீர்த்து வைக்கப்படாத 17 செலவு விடயங்களுக்குரிய பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 308.85 மில்லியனாக இருந்தது. நிதிப்பிரமாணம் 94(1) இல் குறிப்பிடப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கு முரணாக அந்த 17 செலவு விடயங்களுக்காக வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டிலிருந்து பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு ரூபா 4.8 மில்லியனை மிகைத்து அப்பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தது.

**3.5 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

**வெளிநாட்டுப் பயணச் செலவுகள்**

2017 பெப்ரவரி மாதத்தின் போது சிங்கப்பூருக்கும் 2016 யூன் மாதத்தின் போது பிலிபைன்சுக்கும் மலேசியாவுக்கும் மேற்கொண்ட வெளிநாட்டு பயணம் தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

(அ) உயர் கல்விப் பிரிவிற்குரியதான பல்கலைக்கழகங்களின் நிர்மாணச் செயற்பாடுகளை, பல்கலைக்கழக மட்டத்தில் மேற்பார்வை செய்கின்ற வேலை பொறியியலாளர்கள் பாரியளவான நிர்மாண செயற்திட்டங்கள் மற்றும் அவற்றின் பராமரிப்பு தொடர்பான விளக்கங்களைப் பெற்றுக்கொள்ளும் குறிக்கோளுடன் சிங்கப்பூரில் வெளிநாட்டு பயணத்தில் பங்குபறியிருந்தார்கள். அப்பயணத்திற்காக செயற்திட்ட அலுவலகத்தில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த இரண்டு அபிவிருத்தி உத்தியோகத்தர்களை பங்குபற்றச் செய்து அவர்களுக்காக இணைந்த படிகளும் அமையப்படிகளுமாக ரூபா 230,000 (ஐ.அ.டொலர் 1496) செலுத்தப்பட்டிருந்தது. அச் செலவுகள் பயணத்தின் குறிக்கோள்களுக்கு இணங்கியிருக்கவில்லை.

(ஆ) அரசாங்கத்தில் நிரந்தரப் பதவியினை வகிக்காத உயர் கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சின் அமைச்சரின் ஒருங்கிணைப்பு செயலாளர் மேற்கூறிய இரண்டு வெளிநாட்டுப் பயணங்களிலும் பங்குபற்றியிருந்தார். அப் பயணங்களுக்குரிய அமைய மற்றும் இணைந்த படிகளாக முறையே ரூபா 115,400 (ஐ.கு.டொலர் 748) மற்றும் ரூபா 30,856 (ஐ.க.டொலர் 280) உயர் கல்விப் பிரிவினால் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) சுற்றுப்பயணத்தைப் பூர்த்தி செய்து நாட்டுக்கு வருகை தந்த பின்னர் சுற்றுப் பயணத்தின் மூலம் பெற்றுக்கொண்ட அனுபவங்கள் மற்றும் பெற்றுக்கொண்ட பயிற்சிகள் தொடர்பான ஒரு அறிக்கை வழங்கப்பட வேண்டிய போதிலும் இரண்டு சுற்றுப் பயணங்களிலும் பங்குபற்றிய 34 உத்தியோகத்தர்களால் உரிய அறிக்கையை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

உத்தேச ஆசிரியர் பயிற்சிப் பிரிவை ஸ்தாபிப்பதற்கும் கொழும்பு உயர் கல்விப் பிரிவுக் கட்டிடத்தில் பேணப்பட்டு வருகின்ற திட்டமிடல் பிரிவை ஸ்தாபிப்பதற்கும் மற்றும் அரச சார்பற்ற உயர் கல்விப் பிரிவை செயற்படுத்துவதற்காக பத்தரமுல்லை விக்கிரமசிங்ஹ மாவத்தையில் அமைந்துள்ள ஒரு 03 மாடிக் கட்டிடம் ரூபா 570,000 மாதாந்த வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. 2017 யூலை மாதத்தின் போது குத்தகைதருனருடன் 03 வருட குத்தகை உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டு வாடகை வைப்பதற்காக ரூபா 1,710,000 தொகை கட்டிடச் சொந்தக்காரருக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 4500 சதுர அடிக்கும் 5,000 சதுர அடிக்கும் இடைப்பட்ட அளவுடைய கட்டிடத்தின் தேவைப்பாடு காணப்பட்ட போதிலும் அத் தேவைப்பாட்டை கவனத்தில் கொள்ளாது

6,000 சதுர அடி அளவான கட்டிடம் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

(ii) தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் சிபார்சின் பிரகாரம் வாடகைக்குப் பெற்றுக்கொள்கின்ற தற்பொழுது உயர்கல்விப் பிரிவு பேணப்பட்டு வருகின்ற கொழும்பு – 07 வோட் பிளேஸ் அல்லது பத்தரமுல்ல எல்லைக்குள் அமையப் பெற வேண்டியிருந்தது. எவ்வாறாயினும், வோட் பிளேஸ் கட்டிடம் சம்பந்தமாக கவனம் செலுத்தப்படாது பத்தரமுல்ல பிரதேசத்திலுள்ள கட்டிடத்தில் அரச சார்பற்ற உயர் கல்விப் பிரிவை ஸ்தாபித்ததன் காரணமாக அலுவலக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது மேலதிக கிரயத்தைப் போல காலமும் செலவு செய்ய வேண்டிய நிலைமை உருவாகியிருந்தது.

(iii) வாடகைக்குப் பெற்றுக்கொள்ளப்பட்ட கட்டிடத்தில் 2,000 சதுர அடியில் உத்தேச ஆசிரியர் பயிற்சிப் பிரிவை ஸ்தாபிக்காமல் அந்நிகழ்ச்சித்திட்டம் சம்பந்தமாக பொது மக்களுக்கு தெளிவுபடுத்துவதற்காக 2017 ஏப்ரல் மாதத்தின் போது ரூபா 1,150,000 செலவு செய்து பத்திரிகை விளம்பரம் வெளியிடப்பட்டிருந்தது. திட்டமிட்டவாறு அந் நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்ப்படுத்தாமையின் காரணமாக விளம்பரப்படுத்தல் கட்டணம் மற்றும் கட்டிட வாடகை ரூபா 2,280,000 மொத்த தொகை விளைவற்ற செலவாக இருந்தது.

(iv) இக் கட்டிடத்தை வாடகைக்குப் பெற்றுக்கொள்வதற்கு முன்னர் வாடகை அடிப்படையில் அலுவலகம் பேணப்பட்டு வந்த வளவு அமைச்சிற்கு 2016 மார்ச் மாதத்திலிருந்து அடுத்து வரும் இரண்டு ஆண்டுகள் காலத்திற்கு அமுலுக்கு வரும் வகையில் ஒரு சதுர அடி ரூபா 50 வாடகையினை உள்ளடக்கிய மதிப்பீட்டு அறிக்கை மதிப்பீட்டு திணைக்களத்தால் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2016 யூன் மாதம் அந்த அமைச்சு வெளியேறிச் சென்றதன் பின்னர் மீண்டும் கட்டிடத்தில் சில திருத்தங்கள் செய்ததன் காரணமாக ஒரு சதுர அடியின் விலை சிறிய அளவால் அதிகரித்தக்கூடியதாக இருந்தும் 02 மாதங்களான குறுகிய காலத்துக்குள் ஒரு சதுரஅடி ரூபா 95 ஆகிய உயர்ந்த வாடகை நிர்ணயிக்கப்பட்டிருந்தமை சச்சரவுத் தன்மையான விடயமாக இருந்தது.

### 3.7 முகாமைத்துவ பலவீனம்

அரச சார்பற்ற உயர் கல்வி நிறுவனத்தை உயர் கல்விப் பிரிவில் பதிவு செய்யும் போது அறவிடப்படுகின்ற வைப்பு பணத்தை அந்த உயர் கல்வி நிறுவனங்களின் ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்த வேண்டியிருந்தது. அவ்வாறு அறவிடப்பட்ட வைப்பு பணம் அந்த உயர் கல்வி நிறுவனங்களின் எதுவித ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. 2013 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரை அரசசார்பற்ற 22 உயர் கல்வி நிறுவனங்களினால் 38 சந்தர்ப்பங்களின் போது ரூபா 109 மில்லியன் கிடைத்திருந்ததுடன் அப்பணம் மீளாய்வாண்டின் இறுதி வரை வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

**3.8 செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்துதல்.**

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த 05 ஆண்டுகள் காலத்துள் உயர்கல்விப் பிரிவிற்கு வழங்கப்பட்ட நிதி ஏற்பாடு, பயன்பாடு, சேமிப்பு என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | செலவின வகை | தேறிய நிதிஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | |
| 2013 | மீண்டெழுபவை | 877 | 839 | 38 | 4.38 |
| | மூலதனம் | 3,901 | 2,786 | 1,115 | 28.58 |
| | **மொத்தம்** | **4,778** | **3,625** | **1,153** | **24.13** |
| 2014 | மீண்டெழுபவை | 1,090 | 1,090 | - | - |
| | மூலதனம் | 7,088 | 7,019 | 69 | 0.97 |
| | **மொத்தம்** | **8,178** | **8,109** | **69** | **0.84** |
| 2015 | மீண்டெழுபவை | 1,306 | 1,222 | 84 | 6.43 |
| | மூலதனம் | 9,343 | 8,364 | 979 | 10.48 |
| | **மொத்தம்** | **1,0649** | **9,586** | **1,063** | **9.98** |
| 2016 | மீண்டெழுபவை | 1,386 | 1,302 | 84 | 6.06 |
| | மூலதனம் | 7,466 | 5,113 | 2,353 | 31.52 |
| | **மொத்தம்** | **8,852** | **6,415** | **2,437** | **27.53** |
| 2017 | மீண்டெழுபவை | 1,740 | 1,372 | 368 | 21.15 |
| | மூலதனம் | 8,099 | 5,697 | 2,401 | 29.66 |
| | **மொத்தம்** | **9,839** | **7,069** | **2,770** | **28.15** |

மீளாய்வாண்டிற்காக வழங்கப்பட்ட நிதி ஏற்பாடு மற்றும் பயன்பாடு சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) வழங்கப்பட்ட நிதி ஏற்பாடு பயன்படுத்தப்படாமை.**

09 செலவு விடயங்களுக்காக வழங்கப்பட்ட ரூபா 323.9 மில்லியன் மொத்த தேறிய நிதி ஏற்பாடு எதுவித பயன்பாடுமின்றி முழுமையாகச் சேமிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) மிகை நிதி ஏற்பாடு வழங்குதல்**

19 செலவு விடயங்களுக்காக ரூபா 1,682.9 மில்லியன் கூட்டு மொத்தமான மிகை நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததன் காரணமாக அச்செலவு விடயங்களுக்கான நிதி ஏற்பாட்டில் ரூபா 621 மில்லியன் மொத்த தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டதன் காரணமாக சேமிப்பு வழங்கப்பட்ட தேறிய நிதி ஏற்பாட்டில் 24 சதவீதத்திலிருந்து 97 சதவீதம் வரையான வீச்சுடைய அளவில் காணப்பட்டது.

**(இ) குறை நிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீட்டின் மூலம் நிதி ஏற்பாட்டினை வழங்குதல்**

குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீட்டின் மூலம் 12 செலவு விடயங்களுக்காக ரூபா 1,318 மொத்த நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் இறுதி வரை அவற்றில் எப்பணமும் பயன்படுத்தப்படாது முழு நிதி ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

**3.9 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**நிலுவையாகக் காணப்பட்ட கடன் மீதிகளை அறவீடு செய்யாமை.**

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணைக்கக் கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதிகளைத் தவிர்த்து அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் ரூபா 350,977 மொத்த தொகையாக இருந்தது. அந்த நிலுவையாகக் காணப்பட்ட கடன் மீதிகள் 02 ஆண்டுகளிலிருந்து 13 ஆண்டுகள் வரையான வீச்சுடைய காலமாகக் காணப்பட்டு வந்திருந்ததும் அக் கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு உயர் கல்விப் பிரிவிற்கு முடியாதிருந்தது.

**3.10 மனித வளங்கள் முகாமைத்துவம்**

**இணைத்துக் கொள்ளப்பட்ட பதவியணியினர், உள்ளபடியான பதவியணியினர், மற்றும் ஆளணி வேதனத்திற்கான செலவுகள்**

உயர்கல்விப் பிரிவின் கடமைகளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அங்கீகரித்த, உள்ளபடியான, மற்றும் வெற்றிடமான பதவியணியினர் தொடர்பான விபரங்கள் கீழே தரப்படுகின்றது. மீளாய்வாண்டிற்காக உயர்கல்விப் பிரிவினால் ஆளணி வேதன செலவுத் தொகுதிக்காக ரூபா 73.9 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க ஒரு தனிநபருக்கான செலவு ரூபா 648,413 ஆக இருந்தது.

| ஆளணி வகை | | அங்கீகரித்த பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 27 | 19 | 08 |
| (ii) | மூன்றாம் மட்டம் | 06 | 03 | 03 |
| (iii) | இரண்டாம் மட்டம் | 132 | 69 | 63 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 45 | 23 | 22 |
| | **மொத்தம்** | **210** | **114** | **96** |